6. சட்டமுன் வடிவுகள் (அறிமுகம்)

வேளாண் விளைபொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1989-90 அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989–90 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

11-20மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,1989-90-ஆம்ஆண்டிற்கான முதல்துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம் மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 5,82.87 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில் ரூபாய் 2,15,86 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூபாய் 3,67.01 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் அடங்கும். இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டப் பணிகள் குறித்து சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

2. வறட்சி நிவாரணப் பணிகளுக்கென அரசு மொத்தமாக ரூபாய் 48.96 கோடியை அனுமதித்துப் பணிகளைச் செய்து முடித்துள்ளது. அதற்கான தொகை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

3. அரசு அலுவலர்களின் நீண்ட காலக் கோரிக்கையினை ஏற்று, மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையாக ஊதிய விகிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான தொடக்கச் செலவிற்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூபாய் 120 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்காக, மானியக் கோரிக்கை எண். 43—பல்வகையின் கீழ் அடையாள நிதி ஒதுக்கம் கோரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இச் செலவிற்காக அந்தந்த மானியங்களில் தேவைப்படும் அளவிற்குக் கூடுதல் மானியத் தொகை இறுதித் துணை மதிப்பீடுகளில் கோரப்படும். மானியக் கோரிக்கை எண். 42—ஒய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ், 1988 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாளில் இருந்து உயர்த்தப்பட்ட ஓய்வூதியங்களை வழங்குவதற்காக ரூபாய் 70 கோடி கோரப்பட்டுள்ளது. மேலும், பொங்கல் விழாவினை ஒட்டி, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பொங்கல் பரிசைத் தவிர, ஓய்வு ஊதியம் பெறும் அனைவருக்கும் தலா ரூபாய் 100 சிறப்புப் பொங்கல் பரிசாக வழங்கியுள்ளோம். இதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூபாய் 2.07 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

4. திருச்சி மாவட்டத்தில் குமுளூர் கிராமத்தில் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரியைத் துவக்க ரூபாய் 1.39 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து உடனடிச் செலவுகளுக்காக ரூபாய் 30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத் தொகை மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. நெல் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக, குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 35 என கொள்முதல் செய்யும்பொழுது வழங்கப்படுகிறது. கடந்த சம்பா பட்டத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்தத் தொகையை வழங்கியுள்ளது. இதற்கென அரசு இந்தக் கழகத்திற்கு நிலுவையிலுள்ள தொகையான ரூபாய் 10 கோடியை வழங்கியுள்ளது. இந்தத் தொகை மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டு உள்ளது.

5. தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தில், உணவுடன், மாதம் இரு முறை முட்டை வழங்கப்படும் என்று கடந்த கூட்டத் தொடரில் அறிவித்து இருந்தேன். இதற்காக ரூபாய் 6.93 கோடி எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. நடப்பு

ஆண்டில் இதற்காகத் தேவைப்படும் ரூபாய் 9.9 கோடி மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. கிராமப்புறங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பற்றாக்குறையின்றி மருந்துகள் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகளுக்கான செலவு ரூபாய் 20,000 என்று இருப்பதை ரூபாய் 30,000 என்ற அளவிற்கு உயர்த்தி வழங்கப்படும். இதற்காக இந்த ஆண்டிற்குத் தேவையான கூடுதல் தொகையான ரூபாய் 1.09 கோடி மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ், இலவச காலணி வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 3.17 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கூடுதலாக 95 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை துவக்குவதற்காக ரூபாய் 51.65 இலட்சம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இதற்கான தொகை மானியக் கோரிக்கை எண். 17 கல்வி என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

8. சென்னை அரசு பொது மருத்துவ மனையில் நவீன இயந்திரங்களுடன் இருதய அறுவை சிகிச்சை செய்வதற்காகத் தேவைப்படும் ரூபாய் 88.46 இலட்சம் மானியக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

9. வடஆற்காடு மாவட்டம் பிரிக்கப்பட்டு திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் மற்றும் வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம் என இரு மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. புதிய மாவட்டத்தில் பல்வேறு பணிகளுக்கும், புதிய அலுவலகங்கள் ஏற்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் தேவையான நிதி ஒதுக்கீடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

10. காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இந்தத் திட்டத்தில் அனைத்துக் கூட்டுறவு அமைப்புகளின் நீண்ட கால வளர்ச்சிக்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டம் ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 8.63 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இந்த ஆண்டில் இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதி, மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு, மானியக் கோரிக்கை எண். 58—பல்வகை மூலதனச் செலவு மற்றும் மானியக் கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் ஆகிய தலைப்புகளின்கீழ் கோரப்பட்டுள்ளது.

11. துணை மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களில் முக்கியமானவற்றைப் பற்றி நான் இதுவரை எடுத்துக் கூறினேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புகளில் இந்த இனங்களுக்கான விவரங்களைக் காணலாம். 1989-90-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

8. அறிவிப்பு.

முதல் துணை நிதிநிலை அறிக்கை (1989-90) வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989-90-ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலைஅறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் குறித்து, வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், அவற்றைப் பேரவையின் 190-வது விதிக்கிணங்க, 24—1—1990 புதன்கிழமை மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் கொடுக்கவேண்டும்.

9. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—(தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் இப்போது இருக்கின்ற நேரப்படி எஞ்சியிருக்கின்ற நேரம் 96 மணித்துளிகள் மட்டுமே. எனவே, கிட்டத்தட்ட 8 அல்லது 9 பேர் வரைக்கும் பேச வாய்ப்புத் தரப்படும். சரியாக 10 மணித்துளிகளுக்குள் அவரவர்களுடைய பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும். குறுக்கீடுகளைக் குறைக்க வேண்டும். வாய்ப்பிருந்தால் நிறுத்த வேண்டும். குறுக்கீடுகள் கூடிப்போனால், கடைசியில் இருப்பவர்கள் பேச முடியாத நிலைமை கண்டிப்பாக ஏற்படும். அவை 1 மணிக்குச் சரியாக முடியும் என்பதை நினைவூட்டி திரு. சோ. பால்ராஜ் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

11-25 மணி

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிற வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வாய்ப்பினை வழங்கிய தமிழகத்தின் பொற்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற இனமானத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முதன் முதலில் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாத வருமானம் ரூபாய்